REGD. No. M. 63[illegible]   ★ தனி இதழ் 1 அணா   PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ்   ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 25உ. செவ்வாய் (11—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 26உ. புதன் (12—10—55) [இதழ் 101

இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

போலீஸ் அதிகாரி வேலையிலிருந்து நீக்கம்

சென்னை, அக். 10—

கடந்த ஆகஸ்டு திங்களில் இலஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக தலைமுக இலாகா காவலாட்கள் இருவர், ஒரு போலீஸ் உதவி 'சூப்பரின்டென்டெண்ட்', மூன்று போலீசார், நீதிமன்ற சேவகர் ஒருவர் ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், ஒரு தலைமைப் போலீஸ்காரரின் சம்பளம் இரண்டாண்டு காலத்திற்குக் குறைக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது. இந்த நடவடிக்கைகள் இலஞ்ச ஒழிப்பு இலாகாவினரால் மேற்கொள்ளப் பட்டதாம்.

தமிழ்நாட்டு பார்ப்பனருக்கு நேரு எச்சரிக்கை

பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

அகாலி தளத்தவரை அடக்க நடவடிக்கையா?

புதுடில்லி, அக். 10—

'பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை ஒன்றாக இணைத்து பஞ்சாப் மாநிலம் அமைக்க வேண்டும்'—என்ற மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வதாயின், இந்த மாநிலங்கள் அப்படித் திருத்தி அமைவதற்கு இடையில் உள்ள காலத்தில் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும்—என்ற கருத்தினை, பஞ்சாப் முதன் மந்திரி பீம்சென் சச்சார் இந்தியப் பேரரசிற்குத் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இம்மாதிரி மூன்று எல்லையோர மாநிலங்களை ஒன்றாக இணைப்பது என்ற கடினமான வேலையை மேற்கொள்ள பஞ்சாப் மாநில சர்க்கார் தெரிவித்துள்ள மேற்கண்ட கருத்தே சரியானதாகும் என்று வாதிக்கப்படுகிறதாம்.

இயற்கையாகவே இம்மாதிரி இணைப்பு வேலையில் ஈடுபடுவதில் உள்ள சிரமங்கள் ஒருபுறமிருக்க, குழுவின் அறிக்கைமீது அகாலி தளத்தவர் மேற்கொள்ளவிருக்கிற நடவடிக்கைகளினால் ஏற்படும் சிக்கல் வேறு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

'உயர்ந்தோர் என்ற எண்ணத்தை கைவிடுக!'

'இன்றேல் வருந்தத்தக்க விளைவுகள் ஏற்படும்'

"இந்தியாவின் சமூக வாழ்க்கை சாதிகளைச் சுற்றியே வளர்ந்திருக்கிறது; இதனை மாற்றியமைப்பதற்கு வழிவகை காண வேண்டும்;

"சாதிகளில் பற்றுக் கொண்டிருக்கிற மக்களுக்கு வேறு நல்ல கொள்கைகளின் பற்றுக் கோட்டினைக் காட்டாத வரையில், சாதிகளை ஒழிப்பது என்பது சாத்தியமாயிருக்க முடியாது;

"தமிழ் நாட்டில் இந்தச் சிக்கல் குறிப்பிடத்தக்க அளவு இருக்கிறது;

"நாம் சாதி வேறுபாடுகளில் பற்றுக் கொண்டிருக்கிறோம்; இது, இன்றைய நிலைக்கு ஒத்துக்கொள்ளப்பட முடியாதது; நமது நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையிலேயே நாம் அக்கறை கொண்டிருக்கிறோம் என்றால், நாடு முன்னேறுவதற்குரிய ஒரே வழி, இந்த சாதிப் பாகுபாடுகளையும், பிரிவுகளையும் நாம் விட்டொழிக்க வேண்டும்;

"சரியான நேரத்தில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால், 'உயர்ந்தவர்' என்று தங்களைக் கூறிக்கொண்டிருக்கும் வகுப்பினர் வலுவிழந்து, மிக இழிவான முறையில் 'கர்வம்' குலைக்கப்படுவர்;

"'பார்ப்பனர் ஒழிக'—என்ற குரல், தமிழ்நாட்டில் ஒரு பகுதி மக்களால் எழுப்பப்படுகிறது; நிச்சயமாக இது, பார்ப்பனரின் கடந்த காலப் போக்கின் எதிரொலியே ஆகும்;

"'உயர்ந்தவர்' என்ற எண்ணத்தைத் தாங்களாகவே கைவிட்டுவிட்டு, சமூக இயக்கங்களின் நடைமுறையைப் புரிந்து கொள்ள உயர்ந்த நிலையிலிருப்போர் தவறிவிட்டால், வருந்தத்தக்க விளைவுகள் ஏற்படக்கூடும்; 'பலாத்காரம் கையாளப்படமாட்டாது' என்றுகூடக் கூறிவிட முடியாது,"

என்பதாக, பிரதமர் பண்டித நேரு, 'காங்கிரசும் - சாதியமும்'—என்ற தலைப்பில், கடந்த செப்டம்பர் திங்களில், காங்கிரஸ் நிர்வாகிகள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டு, எச்சரித்திருக்கிறார்.

முதன் மந்திரிகள் ஆலோசனை

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை குறித்து விவாதிக்க இப்போதைய மாநிலங்களின் முதன் மந்திரிகள் அக்டோபர் 22, 23-ந் தேதிகளில் கூடுவரென்று தெரிய வருகிறது.

ஒரிசா மந்திரி சபை மீது
நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

புவனேஸ்வரம், அக். 10—

ஒரிசா மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் சுபாகர் இன்று பிரரேபித்திருக்கிறார். வெள்ளத்தைத் தடுப்பதில் மந்திரிகள் மிக அலட்சியமாக இருந்ததாகவும், வெள்ள நிவாரண வேலைகளில் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்றும், கட்சி வேற்றுமை மனப்பாங்குடன் மந்திரிகள் நடந்துகொள்வதாயும், தீர்மானப் பிரரேபணையில் சுபாகர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

திரு-கொச்சி மந்திரி சபை மீது
நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

திருவனந்தபுரம், அக். 10—

திரு-கொச்சி காங்கிரஸ் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு புரட்சி சோஷலிஸ்டு கட்சித் தலைவர் டி. கே. திவாகரனுக்கு சட்டசபை அனுமதி அளித்திருக்கிறது.

வரும் 13-ந் தேதி தீர்மானம் கொண்டுவரப்படும் என்றும், அன்றே சட்டசபை அதனைப் பரிசிலித்து முடிவு தெரிவிக்கும் என்றும் சபைத் தலைவர் கங்காதரன் தெரிவித்திருக்கிறார்.

தீர்மானம் விவாதிப்பதற்கு மூன்று நாள் வேண்டுமென திவாகரன் கேட்டிருந்தார்; ஆனால், சபையின் அலுவல்கள் பல இருப்பதால், ஒருநாள் மட்டுமே விவாதத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று முதன் மந்திரி கோவிந்த மேனன் கூறியதின்பேரில், ஒரு நாள் மட்டுமே விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

'தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் நமக்கு வரவேண்டும்'

சென்னை மந்திரிகள் சுறுசுறுப்பு

"திரு-கொச்சி தமிழ் மக்களுக்கு, குழுவின் அறிக்கை பெருத்த ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது," என்று குஞ்சன் நாடார் எம். எல். ஏ., தெரிவித்திருக்கிறார்.

"தமிழ்ப் பகுதிகளைப் பற்றிய குழுவின் சிபாரிசு எந்தக் கொள்கை, அடிப்படையிலும் அமையக் காணோம்; அது ஒரு தலைப்பட்சமான சிபாரிசாக அமைந்திருக்கிறது; மக்களின் தீர்ப்போ, இயற்கை நியதியோ ஏற்றுக்கொள்ளப்படக்காணோம்;

"பீர்மேடு, தேவிகுளம் தாலுகா மக்கள், தங்கள் கருத்தைத் தெளிவாகக் கடந்த காலத்தில் தெரிவித்துவிட்டனர்—இரண்டு முறை தேர்தல்களின்போதும்;

"நெய்யாற்றங்கரையிலும்கூட பெரும்பாலான பஞ்சாயத்து சபைகளை திரு-தமிழகக் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது; எனவே, எதிர்கால சென்னை மாநிலத்தில் இந்தத் தாலுகாக்கள் இல்லாமலிருப்பது தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது;

"இந்தப் பகுதியில் உள்ள மலையாள மக்கள், பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கு மதிப்புத் தரவேண்டுமென்பது அவசியமாகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

★

காமராசர்

"முழுவதுமாக நோக்கும்போது, குழுவின சிபாரிசுகள் நியாயமானவையாகவே தெரிகின்றன; அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன் நாம், இந்தச் சிபாரிசுகளை அமுல் செய்வதும் சாத்தியமானதேயாகும்."

★

சேதுபதி

"பீர்மேடு, தேவிகுளம் ஆகிய தாலுகாக்கள் தமிழ் நாட்டுடன் இணைய வேண்டும் என்று நாங்கள் கோருவோம்; இந்த இரண்டு தாலுகாக்களையும் பற்றிய குழுவின் சிபாரிசு, தனியே எடுத்துரைத்தலுக்கு உரியதாகியிருக்கிறது.

"இந்தத் தாலுகாக்களில் உள்ள பல இலட்சம் தமிழ் மக்களும், 'போய் வந்துகொண்டிருக்கிற நிரந்தரக் குடிகளாயில்லாதிருப்பவர்கள்' என்ற முடிவுக்குக் குழுவினர் எப்படி வந்தனர் என்ற கேள்வி ஒருவருக்கு நியாயமாகவே எழுகிறது; இந்த இரண்டு தமிழ் தாலுகாக்களும் தமிழகத்துடன் இணைவதற்குப் போதுமான காரண காரியங்கள் நம்மிடம் இருக்கின்றன"

★

மந்திரி ஷெட்டி

மந்திரி ஷெட்டியும், 'தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழ் நாட்டிற்கு வரவேண்டும்,' என்ற கருத்தை அறிவித்திருக்கிறார்.

★

பெரியார் ஈ. வெ. ரா.

"ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என்று பெயர்கள் தரப்பட்டிருக்கும்போது, சென்னையின் பெயர் 'திராவிட நாடு' என்றில்லாவிட்டாலும், ஏன், 'தமிழ் நாடு' என்று குறிக்கப்படவில்லை;

"தமிழ் நாடு என்று சென்னை மாநிலத்தின் பெயரை மாற்றுவதற்காக ஒரு போராட்டமே நடத்துவேன்;

"திரு-கொச்சி மாநிலத்திலிருந்து தமிழ் தாலுகாக்கள், சென்னையுடன் இணைக்கப்படுவது வரவேற்கத் தகுந்தது; கொள்ளேகாலம், போனாலும் பரவாயில்லை;

"உயர் உத்தியோகங்களில் 50 சதவிகிதம் வெளி மாநிலக்காரர்களுக்குத் தரப்படவேண்டும் என்ற குழுவின் சிபாரிசை ஏற்றுக்கொள்ள முடியாது—அது கண்டனத்திற்குரியது."

வடநாட்டில் வெள்ளம்

பெரும் அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாம்

புதுடில்லி, அக். 10—

டில்லி மாநிலத்தில் யமுனை நதியின் வெள்ளப் பெருக்கு பெருஞ் சேதங்களை விளைவித்துவிட்டு, 'சீற்றம்' தணிய முற்பட்டிருக்கிறது.

வெள்ளத்தினால் டில்லி மாநிலத்தில் மட்டும் ஒரு இலட்சம் பேர் வீடிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

மேலும், ஏராளமான வீடுகள் சரிந்துள்ளதுடன், கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புடைய பயிர் நாசமாக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

பஞ்சாப் வெள்ளம்

பஞ்சாபில் ரவி, சட்லெஜ், பியாஸ் நதிகளில் வெள்ளப் பெருக்கு மட்டுப்பட்டு வருகிறதாம்.

இந்த வட்டத்தில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள கிராமங்களில் இந்திய விமானப் படையினர் 60,000 இராத்தல் எடையுள்ள உணவுப் பண்டங்களை வீசியிருக்கின்றனர்.

மேலும் ரவி நதி, திசை திரும்பியிருப்பதாகவும், இந்த நதியில் இரண்டு மடங்கு தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பதாகவும், இதனால் அபாய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பஞ்சாப் வெள்ளச் சேதத்தினை ஈடுகட்டுவதற்காக, பிரதம மந்திரியின் வெள்ள நிவாரண நிதியிலிருந்து பிரதமர் நேரு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார் என்று தெரிகிறது.

வெள்ள நிவாரணம்

ரூ. 2 கோடி ஒதுக்கப்படுகிறது

அமிருதசரஸ், அக். 10—

வெள்ள நிவாரண வேலைகளுக்காக மட்டும் மாநில சர்க்கார் ரூ. 2 கோடி ஒதுக்கியிருப்பதாகவும், குறைந்த வருமானமுடையோர் வீடு கட்டிக் கொள்வதற்காக ரூ. 2 கோடி ஒதுக்கியுள்ளதாகவும், முதன் மந்திரி பீம்சேன் சச்சார் தெரிவித்திருக்கிறார்.

★

வடமேற்கு இந்தியாவில் வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கானோர் மாண்டனராம்; ரூ. 20 கோடி பெறுமான பயிர் நாசமாயிற்றும்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—10—'55 செவ்வாய்

படியுங்கள்! சிந்தியுங்கள்!

★

"படியுங்கள்—நிரம்பப் படியுங்கள்; சிந்தியுங்கள்—தீவிரமாகச் சிந்தியுங்கள்;

"படிக்கப் படிக்கத்தான் சிந்தனை வளம்பெறும்; எனவே, ஏராளமாகப் படியுங்கள்;

"படிக்கிற பழக்கம், இந்தியாவில் மிகவும் குறைந்து வருகிறது; இந்தநிலை ஜனநாயகத்திற்கு ஆபத்தானதாகும்;

"மலிவான விலையில் சிறந்த இலக்கியங்களை வெளியிட ஒரு நிறுவனம் அமைப்பது குறித்து இந்திய சர்க்கார் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது;

"இதர நாட்டு இலக்கியங்களில் சிறந்தவற்றை மொழி பெயர்க்கவும், இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் சிறந்த இலக்கியங்களை எல்லோரும் வாங்கிப் படிக்கக் கூடிய வகையில்—மலிவான விலையில் வெளியிடவும், அந்த நிறுவனம் முற்படும்;

"பெருவாரியான மக்கள் எழுதவும், படிக்கவும் தெரிந்திருந்தால்தான் ஜனநாயகமும், முன்னேற்றமும் நிலைக்க முடியும்; ஓரளவு அவர்கள் கல்வி பெற்றதும், நன்கு படிக்கவும், சிந்திக்கவும் பழக்கப்படுத்தப்பட வேண்டும்,"

என்றெல்லாம், இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் சென்னையில் தென்னாட்டு மொழிகள் புத்தக 'டிரஸ்ட்' ஒன்றை கடந்த கிழமையில் துவக்கிவைக்கும்போது, குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிதர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஊன்றிக் கவனித்தற்கு உரியனவாகும்.

நாட்டு மக்களில் இன்று பெரும்பாலானோர், நூற்றுக்கு சுமார் 80 சதவிகிதம் வரை கல்வி வாசனை அறியாதவர்கள்; படித்தவர் என்று கணக்கிடப்படும் 20 சதவிகிதத்தினரில் பெரும் பகுதியினர், சாதாரணமாகத் தாய் மொழியில் ஓரளவு எழுதவும்—படிக்கவும் மட்டுமே தெரிந்துகொண்டிருப்பவர்கள்; கற்றவர் என்ற சொல்லுக்குரிய முழுப் பொருளுக்கு இலக்கணமாயமையும் வகையில் கல்வி அறிவு பெற்றிருப்பவர் தொகை மிகமிகக் குறைவு.

இந்த மிக மிகக் குறைவான எண்ணிக்கையினரான கற்றவா பலர், ஏதோ—'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்கிறார்களே—அந்த வகையில் படித்தோம்; அந்தப் படிப்பைக் கொண்டு இயந்திரம்போல உழைத்து, நான்கு காசு சம்பாதித்துக் காலத்தை ஓட்டுவோம்'—என்று எண்ணுபவர்களாயிருக்கின்றனரே தவிர, தமக்குக் கிடைத்துள்ள கல்வி அறிவின் துணை கொண்டு, நாட்டின் பல்வேறு நிலைகளையும் சிந்தித்துப் பார்த்துச் செயலாற்றுபவர்களாக இருப்பதில்லை.

ஒருசிலர் மட்டுமே தங்களின் சிந்தனைக்கு வேலை தருபவர்களாயிருக்கின்றனர்; இந்த நிலை மாற வேண்டும்; மக்கள் எல்லோரும் நல்ல கல்வி அறிவு பெறவேண்டும்; அந்த அறிவின் துணை கொண்டு தங்களது சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும்; அவர்களது வளர்ந்த சிந்தனை மக்களின் நல்வாழ்விற்குப் பயன்பட வேண்டும்—இதனை மறுப்பாரில்லை; ஆனால், மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறுமாறு யார் செய்ய வேண்டும்? அந்தப் பொறுப்பு யாரைச் சேர்ந்தது? ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்களைத்தானே அந்தப் பொறுப்பு சாரமுடியும்? ஆனால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் பிரதமர் நேரு, கடந்த எட்டாண்டு காலத்தில் மக்களின் கல்வி அறிவு, சிந்தனை வளர்ச்சிக்காக சாதித்துள்ளதுதான் என்ன?

அவரே குறிப்பிட்டிருக்கிறார்—'கல்வி அறிவு பெற்றவர்கள், மேலும் மேலும் படித்து சிந்திக்க வேண்டும்; ஆனால், அவர்கள் படிப்பதும், சிந்திப்பதும் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகின்றது'—என்று; 'இந்த நிலைமைக்குக்காரணம், அடிப்படை என்ன?'—என்று கண்டறிந்து, 'அந்த நிலைமாற என்ன செய்தார், பண்டிதர்?'—என்ற கேள்வி எழுகிறது.

மலிவான புத்தகங்கள் வெளியிடப்போகின்றனராம். செய்ய வேண்டிய காரியந்தான்; ஆனால், 'ஏற்கனவே உள்ள இலக்கியங்களையும் மலிவான விலையில் வெளியிடப் போகின்றோம்' என்று தெரிவிக்கிறார்; ஏற்கனவே இங்கு, இலக்கியங்கள் என்று கருதப்படுபவை எல்லாம் மகேசன் புகழ் பாடும் மதப் பிரச்சார 'இலக்கியங்கள்'தான்; மக்களைப் பற்றி இருக்கிற பழம் பெரும் தூய இலக்கியங்கள் எல்லாம், மக்களிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கின்றன; இந்தஉண்மையை மறந்துவிடக்கூடாது — புத்தகங்களை வெளியிட நினைப்போர்!

மாணவன் பள்ளியில் படிக்கும்போதே இந்த மதப் பிரச்சார 'காதை'கள் தான் 'இலக்கியம்' என்று சொல்லித் தரப்படுகின்றது.

பகுத்தறிவுக்கும், நடைமுறை வாழ்வுக்கும் எவ்வகையிலும் உதவாத கருத்துக்களைப் புகுத்தும் மதப் பிரச்சாரக் 'காதை'களையே மீண்டும் மலிவாக வெளியிடுவதின் மூலம், பண்டிதர் விரும்புகிற சிந்தனை நிச்சயம் வளராது; ஏனெனில், மக்கள் சிந்தனை இழந்ததற்குக் காரணமே, அவர்கள், மதத்திற்கு மண்டியிட்டதுதான்; மக்கள் அறிவு பாழானதற்குக் காரணமே, மூடத்தனத்தை வளர்க்கும் புராணப் 'புளுகு மூட்டை'கள் தான்; இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இவற்றின் நிலை என்ன என்பதை இறுதியாகமுடிவுசெய்யும்வரைஎன்னதான் புதிய புத்தகங்களை வெளியிட்டாலும், மக்களின் சிந்தனை வளம்பெற முடியாது. புத்தகம் வெளியிட எண்ணுவோர் இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும்.

மாநில புனரமைப்புக் குழு

தென்னாட்டு மாநிலங்கள் பற்றிச் செய்துள்ள சிபாரிசு

தென்னாட்டு மாநிலங்களைப் பொறுத்தவரை, மாநில புனரமைப்புக் குழு சில முக்கியமான சிபாரிசுகளைச் செய்திருக்கிறது.

"இப்போதுள்ள திரு-கொச்சியுடன் சென்னையில் உள்ள மலபாரை இணைத்தும், திரு-கொச்சியிலிருக்கும் தமிழ் தாலுக்காக்களில் 5 நீக்கியும் கேரள மாநிலம் அமைக்க வேண்டும்.

"திரு-கொச்சியிலிருந்து பிரியும் 5 தமிழ் தாலுகாக்களைச் சேர்த்துக்கொண்டு, மலபார், தென் கன்னட மாவட்டங்கள் நீங்கலாக—சென்னை மாநிலம் அமைய வேண்டும்;

"இப்போதுள்ள மைசூர், சென்னையிலிருந்து பிரியும் தென் கன்னட மாவட்டம், ரெய்ச்சூர், குல்பர்க்கா வட்டங்கள் நீங்கலாக ஐதராபாத்தில் உள்ள மராத்வாடா மாவட்டம், பம்பாயில் உள்ளடங்கிய கர்நாடக மாநிலம் அமைய வேண்டும்;

"கன்னட, மராத்திய மாவட்டங்கள் நீங்கலாக உள்ள ஐதராபாத், தொடர்ந்து, 'ஐதராபாத் மாநிலம்' என்ற பெயரில் நீடிக்க வேண்டும்;

"1961-ல், அல்லது, அதை ஒட்டி நடைபெறும் பொதுத் தேர்தலில் சட்ட சபையில் மூன்றில் இரண்டு பகுதியினர் வாக்களித்தால், ஆந்திரத்துடன் இணைந்து, விசால ஆந்திரமாக அமைத்துக்கொள்ளலாம்;

"இப்போது, மைசூருடன் இணைக்கப்பட்டிருக்கும் பெல்லாரி மாவட்டத்தின் சிறுகுப்பா, ஹோஸ்பெட், மல்லாபுரம் உப தாலுகாவின் துங்கபத்திரா அணைக்கட்டுப் பிரதேசம் ஆகியவை பிரிக்கப்பட்டு ஆந்திரத்துடன் இணைய வேண்டும்;

"சென்னை நகரின் இப்போதைய நிலையில் மாறுதல் எதுவும் கூடாது; அதன் எதிர் காலம் முடிவு செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டும். பல காரணங்களையும் தீர யோசித்து ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட ஒரு முடிவை மீண்டும் மாற்ற வேண்டுமென நினைப்பது தேவை இல்லாதது—விரும்பத்தகாதது," என்று குழுவினர் அறிவித்திருக்கின்றனர்.

புதுடில்லி, அக். 10—

மாநிலப் புனரமைப்புக் குழு, தன்னுடைய அறிக்கையில் கண்டுள்ள சிபாரிசுகளைச் செய்வதற்குரிய காரணங்களை விளக்குகையில், திருவாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகள் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளது:—

"திருவாங்கூர் மாவட்டத்திலுள்ள தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றங்கரை; கோட்டயம் மாவட்டத்திலுள்ள தேவிகுளம், பீர்மேடு, கொல்லம் மாவட்டத்திலுள்ள செங்கோட்டை; திருச்சூர் மாவட்டத்திலுள்ள சித்தூர்—ஆகிய திரு-கொச்சியின் 9 தமிழ் பேசும் தாலுகாக்களையும் சென்னை மாநிலத்துடன் சேர்க்குமாறு கோரப்பட்டது. இத்தாலுகாக்களிலுள்ளவர்கள் தமிழ் பேசுகிறார்களென்றும், பூகோள ரீதியான காரணங்களை உத்தேசித்தும், இந்த 9 தாலுகாக்களையும் சென்னை மாநிலத்துடன் சேர்க்குமாறு கோரப்பட்டது; ஆனால், புனரமைப்புத் திட்டத்தில், நாங்கள் பிரதேச எல்லைகளை சரிப்படுத்துவதற்கு மாவட்டத்தை ஒரு அடிப்படை 'யூனிட்'டாக வைத்துக்கொண்டிருக்கிறோம்;

"திரு-கொச்சி மாநிலத்தின் தமிழ் பேசும் தாலுகாக்களின் மக்கள் தொகைக் கணக்கேடுகளைத் திரும்பச் சரிபார்த்ததின் விளைவாக சென்னை சர்க்கார் கோரும் 9 தாலுகாக்களில் பல்வேறு தாய்மொழி பேசுபவர்கள் எவ்வளவு சதவிகிதம் இருக்கின்றனர் என்று புள்ளி விவரம் தற்போது கிடைத்துள்ளது 'நாஞ்சில் நாடு' என்று கூறப்படும் அகஸ்தீசுவரம், தோவாலை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தென் தாலுகாக்களில் தமிழ் மொழி பேசுபவர்கள் 79 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறார்கள்—என்பது, இப்புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. இப்பிரதேச மக்களின் விருப்பம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்களின் விருப்பங்களை ஏன் கௌரவிக்கக் கூடாதென்பதற்கு எவ்வித விசேட காரணமும் இல்லை.

"செங்கோட்டை தாலுகா சென்னை மாநிலத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில், ஓரளவு திட்டுப் பிரதேசமாக இருக்கிறது. இத்தாலுகாவில், தமிழ் பேசும் மக்கள் 93 சத விகிதத்தினர் உள்ளனர்; பூகோள ரீதியில், இத்தாலுகா திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது; திருநெல்வேலி மாவட்டத்துடனேயே இப்போது இணைய வேண்டும்.

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களின் நிலைமை முற்றிலும் வேறுவிதமானது; இவை, மலைப் பிரதேசங்கள்; பல்வேறு பொருளாதாரக் காரணங்களையும், மற்ற காரணங்களையும் உத்தேசித்து, திருவாங்கூர் மாநிலத்திற்கு மிகவும் முக்கியமானவை; தேவிகுளம், தாலுகாவிலும், பீர்மேடு தாலுகாவிலும் முறையே தமிழ் பேசும் மக்கள் 72·44 சதவிகிதத்தினர்; இத்தாலுகாக்களில், தோட்டத் தொழிலாளர் காரணமாக தமிழ் பேசுபவர்கள் அதிகமாக இருக்கிறார்களென்று கூறப்படுகிறது. பீர்மேடு, தேவிகுளம் தாலுகாக்கள் பற்றிய சமீபத்திய புள்ளி விவரங்களின்படி இங்கு தமிழ் பேசும் மக்கள் முறையே 30 சத விகிதம், 46 சதவிகிதம் என்று தெரிகிறது. இவர்கள் இங்கு நிலையாக இருப்பவர்கள் அல்ல; வந்து போகிறவர்கள்.

"இந்த இரண்டு தாலுகாக்களிலுமிருக்கும் நிலையாகதமிழ் பேசும்

(3-ம் பக்கம் பார்க்க.)

மாநிலங்களுக்குப் 'பேரிடி?'

புதுடில்லி, அக். 10—

மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளின் விளைவாக, சர்க்கார் ஊழியர்களின் சம்பளங்களை நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியுள்ளதாக மாற்றியமைக்க வேண்டியிருக்கும்; 'இந்த மாறுதல், கூடுதலாகத்தானிருக்க முடியும்' என்று குழு குறிப்பிட்டுள்ளது.

இப்படிச் செய்வதானால் ஆண்டிற்கு 10 முதல் 11 கோடி ரூபாய் வரை அதிகம் தேவைப்படும் என்று உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது.

இந்த மதிப்பீட்டை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், குழுவின் யோசனையின் விளைவாக, சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை வலுக்கவே செய்யும் ஓரளவுக்காவது, மாநிலங்கள், சம்பளத்தை உயர்த்துவது தவிர்க்க முடியாததென்றே தோன்றுகிறது.

சிபாரிசுகளின் எதிரொலி!

மக்கள்சபை கருத்தின் மீதே சர்க்கார் முடிவுக்கு வரும்?

புதுடில்லி, அக். 10—

மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்றுவதானால், உ. பி., ஒரிசா தவிர, மற்றெல்லா மாநிலங்களிலும், மக்கள் சபைக்கும், மாநில சட்டசபைகளுக்கும் புதிதாகத் தொகுதிகளை நிர்ணயிக்கும் வேலையை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

சிபாரிசுகளை நிறைவேற்றுவது சம்பந்தமான அரசியல் சட்டத் திருத்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் பொருட்டு, மந்திரி சபை விரைவில் கூடி குழுவின் சிபாரிசுகள் பற்றி முடிவு செய்யும் என்று தெரிகிறது.

1956-ம் ஆண்டின் முடிவிலோ, அல்லது, 1957-ம் ஆண்டின் ஆரம்பத்திலோ, திட்டப்படி, அடுத்த பொதுத் தேர்தல்களை நடத்துவதாகயிருந்தால், தொகுதி நிர்ணயத்துக்குத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் புதிய நிலையில் ஆந்திரா, திரு-கொச்சியில் பொதுத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கும்; தேர்தல் கமிஷனே தொகுதி நிர்ணயத்தைக் கவனித்துக்கொள்ளலாம்.

நவம்பரில், குழுவின் அறிக்கையை, மக்கள் சபை விவாதிக்கும். மக்கள் சபையின்கருத்து தெரிந்த பின்னர்தான், சர்க்கார் இது பற்றி முடிவு செய்யக்கூடுமென்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் சமீபத்தில் கூறியுள்ளார்.

உத்தேச அங்கங்கள், அவைகளின் பிரதேசப் பரப்பு, மக்கட்தொகை முதலியவை பின்வருமாறு இருக்கும்:—

மாநிலங்கள்

	பரப்பளவு (சதுர மைல்)	மக்கட் தொகை (லட்சக்கணக்கில்)
சென்னை	50,170	300
கேரளம்	14,980	136
கர்நாடகம்	72,730	190
ஐதராபாத்	45,300	113
ஆந்திரம்	64,950	209
பம்பாய்	1,51,360	402
விதர்ப்பம்	36,880	76
மத்தியப் பிரதேசம்	1,71,200	261
இராஜஸ்தான்	1,32,300	160
பஞ்சாப்	58,140	172
உத்தரப் பிரதேசம்	1,13,410	632
பீகார்	66,520	385
மேற்கு வங்காளம்	34,590	265
அசாம	89,040	97
ஒரிசா	60,140	146
ஜம்மு—காஷ்மீர்	92,780	44

மத்திய நிர்வாகப் பிரதேசங்கள்

டில்லி	578	17,44,072
மணிப்பூர்	8,268	5,77,635
அந்தமான்-நிக்கோபார் தீவுகள்	3,215	30,971

தவறை திருத்திய மாணவர் தாக்கப்பட்டார்!

காரைக்குடி காங்கிரசாரின் அடாத செயல்!

கல்லூரி மாணவர்கள் எதிர்ப்பு—நகரசபைத் தலைவர் மன்னிப்பு கோரினர்

காரைக்குடி, அக். 10—

இந்நகர் செக்காலையில், இன்று நடைபெறும் தேர்தலுக்காகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில், 6-ந் தேதி மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தேசியத் தோழர் டி. எம். மாரிமுத்து குழுவினரால் கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது அவர், 'நீலகிரி மலையின் உயரம் 7000 மைல்' எனக் கூறினர்; அருகிலிருந்த ஓர் கல்லூரி மாணவர், 'நீலகிரி மலையின் உயரம் 7000 மைல் அல்ல—7000 அடி' என்று கூறித் திருத்தினர்; அதன் காரணமாக வாக்குவாதம் முற்றியது. அப்போது அருகிலிருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் நகரசபைத் தலைவருமான கே. ஆர். சுப்பையா (அம்பலம்) அவர்களும், அவரைச் சார்ந்த வேறு இருவரும், அக்கல்லூரி மாணவரை தங்கள் காலில் உள்ள செருப்பை எடுத்துத் தாக்கினர்கள்

பின்னர், அழகப்பா கல்லூரியையும், அழகப்பா பெண்கள் கல்லூரியையும் குறித்து தகாத முறையில், 'சேர்மன்' அவர்கள் பேசியிருக்கிறார். அப்போது கூட்டத்திலிருந்த இரண்டு கல்லூரி ஆசிரியர்கள், சேர்மனை தனியாகச் சந்தித்திருக்கின்றனர்; அப்போதும் தன்னுடைய போக்கைக் கைவிடாத சேர்மன், அவ்வாசிரியர்களையும் ஏசியிருக்கிறார்.

மறுநாள் காலை 10 மணியளவில், கல்லூரி மாணவர்களால் மிகப் பெரிய அளவிலோர் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. அவ்வூர்வலத்தில் அழகப்பா கல்லூரி (எல்லாப் பிரிவு) மாணவர்கள் அத்தனைபேரும் கலந்துகொண்டனர். ஊர்வலம் மிக்க அமைதியான முறையில் காரைக்குடி நகர் முழுவதும் சுற்றிச் சென்று மக்களிடம் நிலைமையைத் தெரிவித்தனர்.

'உடனடியாக நகரசபைத் தலைவர் கே. ஆர். சுப்பையா (அம்பலம்) மாணவரை அவமானப்படுத்தியதற்கும், கல்லூரியைத் தாழ்வாகப் பேசியதற்கும் மாணவர்கள் முன் மன்னிப்புக் கேட்க வேண்டும்,' என்று ஆங்காங்கே ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஊர்வலத்தில் கல்லூரி முதல்வர் திரு. ஏ. என். தம்பி அவர்களும், மற்றும், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். பின் யாவரும், சேர்மன் வீடு சென்றனர்; அங்கு அவர் காணப்படவில்லை; பிறகு, போலீஸ் நிலையத்தில் தற்காப்புக்காகத் தங்கியிருப்பதாக அறிந்து, அவரை ஒரு சில ஆசிரியர்கள் சந்தித்தனர்; தான் கல்லூரியில் வந்து மன்னிப்புக் கோருவதாக சேர்மன் கூறவே, மாணவர்கள் அமைதியாகக் கல்லூரிக்குச் சென்றனர்.

பின்னர், மாலை 4-30 மணியளவில், கல்லூரி வளைவில் மாணவர்கள் கூடினர்; கல்லூரி முதல்வர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டதின் பேரில், மாணவர்கள் ஆத்திரத்தை அடக்கி அமைதியாக இருந்தனர்.

பின்னர், சேர்மன் அவர்கள், மேடைக்கு வந்து பேசத் தொடங்கினர்.

"தான் கல்லூரிக்கு மிகுந்த தொண்டு செய்ததாகவும், 'காந்தி மாளிகை' கல்லூரி மாணவர்களுக்கு கிடைக்கும்படி செய்ததாகவும், தான் ஓர் காந்தீயவாதி—காந்தியின் வாரிசு எனவும் கூறிக் கொண்டார்.

பின்னர், தான் செய்த தவறை நினைத்துக் கண்ணீர்விடுவதாகவும், தன்னை மன்னித்துவிடும்படியும் கேட்டுக்கொண்டதுடன், கல்லூரித் தலைவர் ஏ. என். தம்பி அவர்களிடம் ஓர் காகிதத்தில் மன்னிப்பு மடல் ஒன்றும் வரைந்து கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார். அது இப்போது கல்லூரி சேர்மன் வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. (ஏ. ஙி)

மொராக்கோ சுதந்திரம்

பிரெஞ்சு மந்திரி சபை நெருக்கடி தளர்கிறது

கண்டனத் தீர்மானங்கள் தோல்வி

மொராக்கோவிற்கு சுதந்திரம் வழங்கும் விஷயமாக, பிரெஞ்சு மந்திரி சபையின் கொள்கையைக் கண்டிக்கும் கண்டனத் தீர்மானம் தேசிய சட்டசபையில் தோற்று விட்டது.

சர்க்காருக்கு ஆதரவாக 477 வாக்குகளும், கண்டனப் பிரேரபணைக்கு ஆதரவாக 140 வாக்குகளும் கிடைத்தன.

மொராக்கோவிற்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவது சம்மந்தமான திட்டத்தைக் கண்டித்து 'கன்சர்வேடிவ்' கட்சியினர் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருந்தனர்; மூன்று நாட்கள் விவாதம் நடைபெற்றது.

அரசியல் சீர்திருத்தம் வழங்கப்படாவிட்டால், இரத்தக்களறியும் படுநாசமும் விளையுமென பிரதமர் எட்கார் பாரே எச்சரித்திருந்தார்.

தேசிய சட்டசபையில் சர்க்காரைக் கவிழ்க்கவோ, அல்லது பதவியில் நீடிக்கச் செய்யவோ, தேவையான வாக்கு பலம் சோஷலிஸ்டுக் கட்சியிடம் இருக்கிறது; ஆனால், பிரெஞ்சு சர்க்காரின் கொள்கையை அது ஆதரிப்பதென முடிவு செய்ததின் விளைவாகக் கண்டனத் தீர்மானம் படுதோல்வி அடைந்தது.

பின்னர் கம்யூனிஸ்டுகள் பிரேரேபித்த கண்டனத் தீர்மானமும் தோல்வி கண்டது.

கடந்த ஆண்டு திங்களில் ஏற்பட்ட பிரெஞ்சு மொராக்கோ உடன்பாட்டினை அமுலுக்குக் கொண்டுவராதது குறித்து இப்பிரேரபணை கொண்டு வரப்பட்டது.

மொராக்கோ பற்றி பிரெஞ்சு சர்க்காரின் கொள்கைக்கு ஆதரவு தேடி சர்க்கார் கட்சியினர் ஒரு பிரேரபணை கொண்டுவருவர் என்றும், அது நிறைவேறிவிடக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

தோட்டக் கலை அபிவிருத்தி

ரூ. 14 கோடி ஒதுக்கப்படுமாம்

இந்திய சர்க்கார் திட்டம்

சென்னை, அக். 10—

விவசாயத் துறையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று தோட்டக் கலையை அபிவிருத்தி செய்வதாகும் தோட்டக் கலை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமாக ரூ. 14 கோடி ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தியா முழுவதிலுமாக தோட்டக் கலைப் பயிற்சிக்கு 6 நிலையங்கள் ஏற்படுத்தவும்படுமாம்.

புதிதாகப் பழத் தோட்டங்கள் ஏற்படுத்தப்படும் பிரதேசங்களுக்குக் கடன்கள் வழங்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

தனிப்பட்டவருக்குச் சொந்தமான பழங்கள், காய்கறித் தோட்டங்கள் ஆகியவற்றை குறைந்த பட்சம் 10,000 ஏகருக்கு விரிவாக்கவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனராம்.

சட்டத்தில் ஒரு திருத்தம்!

பாட்டியாலா, அக். 10—

பெப்சு சர்க்கார் சிப்பந்திகள் பல பெண்களை மணம் செய்து கொள்ளக் கூடாதென சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

புதிய சட்டத் திருத்தப்படி, முதல் மனைவி இருக்கும்போதே, சர்க்கார் சிப்பந்திகள் இரண்டாவது மனைவியை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது; சில சந்தர்ப்பங்களில் விசேட அனுமதியின் மீது இது அனுமதிக்கப்படும்.

மாநில புனரமைப்புக் குழுவின்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மக்கள் முறையே 14 சத விகிதம், 26 சத விகிதம்; திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் மொத்த பரப்பளவில், தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களின் பரப்பளவு 12 சத விகிதமாகும்; இங்கு மக்கள் தொகை குறைவென்றாலும், இத்தாலுகாக்களில் ஆனைமலைத்தொடரும், இமய மலையிலுள்ளதைப் போன்ற சில உயரமான சிகரங்களும் இருக்கின்றன; திரு-கொச்சி மாநிலத்தின் மிக முக்கியமான நதியான பெரியாறு, இங்குதான் உற்பத்தியாகிறது. பள்ளத்தாக்குகளிலுள்ள நெல் வயல்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கவும், தோட்டங்கள், காடுகள், நீர்விசை மின்சாரத் திட்டங்கள் சம்பந்தமான திரு-கொச்சியின் விசேட பொருளாதார நலன்களை வளர்ப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமாகிறது. தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை திரு-கொச்சியிலிருந்து பிரித்துவிட்டால், மேற்கண்ட திட்டங்களை திரு-கொச்சி மாநிலத்தில் திறமையாக மேற்கொள்ள முடியாது.

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களிலுள்ள பெருவாரியான மக்கள் ஆரம்பத்தில் இங்கு நிலையாக இல்லாதவர்களாக இருந்தாலும்கூட, இப்போது இங்கு தமிழர்கள் அதிக அளவில்இருக்கிறார்கள். 1954-ம் ஆண்டுத் தேர்தல்களில், இப்பகுதியிலிருந்து, திரு-கொச்சி சட்ட சபைக்கான இரண்டு இடங்களையும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கைப்பற்றியது என்று தமிழர் தரப்பில் கூறப்படுகிறது. இப்பகுதியில் திரு-கொச்சி சர்க்காரின் விசேட நலன்களை, திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசே ஒப்புக்கொள்கிறது என்பது முக்கியமானது. தமிழ் நாட்டுக்கு மாற்றக் கோரும் பகுதிகளிலிருந்து தேவிகுளம் தாலுகாவிலுள்ள பள்ளிவாசல் பகுதியையும் (இங்குதான் நீர்விசை மின்சார நிலையம் இருக்கிறது), பீர்மேடு தாலுகாவின் பெருவந்த நாட்டுப் பகுதியையும் (இங்கு முண்டக்காயம் டவுன்ஷிப்பும், ரப்பர் தோட்டமுமிருக்கின்றன) விலக்கி வைக்க திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தயாராக இருக்கிறது. இதிலிருந்து, பீர்மேடு, தேவிகுளம் தாலுகாக்கள் மீது திரு-கொச்சி சர்க்காருக்கு உள்ள பாத்தியதையில் ஓரளவு ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட இரண்டு தாலுகாக்கள் பிரச்சினையில், பிரதேச எல்லை மாறுதல்களுக்கு மொழிவாரிக் கொள்கையை மட்டும் நாங்கள் பிரதான விஷயமாகக் கருதவில்லை.

"நெய்யாற்றங்கரை பிரதானமாக மலையாளம் பேசும் பகுதி; இங்கு 86 சத விகிதம் பேர் மலையாளம் பேசுகிறார்கள்.

சித்தூர்

திருச்சூர்மாவட்டத்திலுள்ள சித்தூரைப் பொறுத்தவரையில் இங்கு 65 சத விகிதம் பேர் தமிழ் பேசுபவர்கள் என்று கூறப்படுகிறது; ஆனால் மக்கள் தொகை பற்றிய மறு பரிசீலனையில் இங்கு மலையாளம் பேசுபவர்கள் 59.8 சத விகிதம் இருக்கிறார்களென்று தெரிய வந்தது. நெய்யாற்றங்கரை, சித்தூர் தாலுகாக்களைப் பிரிப்பதற்கு எவ்வித விசேட காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை, சித்தூரின் ஒரு பகுதி இப்போது சென்னை மாநிலத்தின் திட்டுப் பகுதியாக இருக்கிறது. கேரள மாநிலம் அமைக்கப்பட்டால், இதை சவுகரியமாக மலபாருடன் சேர்க்கலாம்; மலபார் கேரளத்தின் பகுதியாகிவிடும்.

கொள்ளேகாலம் தாலுகா

சென்னை மாநிலத்திலுள்ள மலபார், தென் கன்னடம் மாவட்டங்களும், மைசூர் எல்லைகளை ஒட்டியுள்ள கன்னடம் பேசும் பகுதிகளும், குறிப்பாக, கோவை மாவட்டத்தின் கொள்ளேகாலம் தாலுகாவும் தமிழ் பேசப்படாத பகுதிகள். மலபார், தென் கன்னடம் மாவட்டங்களைப் பிரிப்பதற்கு சென்னை சர்க்கார் எவ்வித ஆட்சேபணையும் கூறவில்லை. கர்னடக மாநிலம் அமைக்கப்பட்டால், இந்த இரண்டு மாவட்டங்களையும் கர்னடக மாநிலத்துடன் சேர்ப்பதற்கு சென்னை முன்பு சம்மதித்தது; ஆனால், தற்போதைய மைசூர் மாநிலத்துடன் ஒட்டியுள்ள வடக்குப் பகுதியை மட்டும்தான் மாற்ற வேண்டுமென்று பின்னர் கூறியது. கொள்ளேகாலம் தாலுகாவைப் பிரிப்பதற்குச் சாதகமாகக் கூறப்பட்ட வாதங்களை எல்லாம் நாங்கள் உன்னிப்பாகப் பரிசீலித்தோம்; ஆனால், இவை, சமாதானம் ஏற்படுத்துவதாக இல்லை; எனவே, எங்கள் திட்டப்படி கொள்ளேகாலம் தாலுகா பூராவும் இனி சென்னையின் பகுதியாக இராது."

சுபாஷ் சந்திர போஸ் 'மாயமாக மறைந்த' விவரம்!

ஆராய்வதற்குக் குழு நியமிக்கப்படுகிறது

கல்கத்தா, அக். 7—

சுபாஷ் சந்திரபோஸ் 'மாயமாக மறைந்தது' பற்றிய விவரங்களை ஆராய்ந்து அறிவதற்காக, போசின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உள்ளடங்கிய ஒரு சிறு அதிகாரப் பற்றற்ற குழு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சுபாஷின் நெருங்கிய தோழராயிருந்த மேஜர்ஜெனரல் ஷாநவாஸ் என்பாரிடம், பண்டித நேரு, அப்படி ஒரு குழு அமைப்பதில் தமக்கு ஒன்றும் தடை இல்லை என்றும் தெரிவித்திருக்கிறாராம்.

குழுவில் போசின் குடும்பத்தவர் ஒருவரைச் சேர்ப்பதின் நோக்கம், ஜப்பானியர்களின் ஒத்துழைப்பு, தேவைப்படும் விபரங்களைச் சேகரிப்பதற்குத் தேவைப்படுவதே என்று கூறப்படுகிறது.

ஜப்பான் சர்க்கார், இந்தோ—ஜப்பானிய கூட்டுக் குழு ஒன்றை அமைப்பதற்குத் தயாராயிருப்பதாக அறிவிக்குமானால், இந்த அதிகாரப் பற்றற்ற குழுவிற்கு தேவையே இருக்காது என்று இந்தக் குழு அமைக்கத் திட்டமிட்டிருப்பவர்கள் கருத்தறிவிக்கின்றனர்.

செய்திச் சுருள்

★

துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றம்

2—10—55 இரவு 10 மணிக்கு, தோழர் எஸ். ஆர். எம். ஆர். அவர்களது இல்ல மாடியில் நடைபெற்ற மன்ற உறுப்பினர் கூட்டத்தில், செயலாளர் தோழர் ஆர். வி. துளசிராமனது விலகலை ஏற்றுக்கொண்டும், அவருக்குப் பதிலாக தோழர் ஜே ஆர். கிருஷ்ணமூர்த்தியைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் இரண்டு முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—அமைந்தகரை அறிவியக்க மன்றம்

2—10—55 காலை 10 மணிக்கு, மேற்படி மன்ற நிர்வாக உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். தேவராசன், இரா. பா. சாரதி, கே. குப்புசாமி, இராதாகிருட்டிணன் ஆகியோர் முறையே தலைவராகவும், செயலாளராகவும், துணைச் செயலாளராகவும்,பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருத்துறைப்பூண்டி மஜீத் மன்றம்

30—9—55 இரவு 10 மணிக்கு, மஜீத் மன்றச் செயற்குழுக் கூட்டம், ஜவுளி கடைத் தெருவில் உள்ள தெட்சிணாமூர்த்தி இல்லத்தில், தோழர் கோ. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது மன்றத் துவக்க விழா வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மன்றத்திற்கென வாடகைக்கு ஒரு அலுவலகம் வாங்குவதெனவும், 1—10—55 முதல் 1—11—55 வரை மன்றத்திற்கு உறுப்பினர் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி வீர. வ.உ.சி. கழகத் தேர்தல்

2—10—55 மாலை 6 மணிக்கு, தோழர் கே. செல்லையா தலைமையில் மேற்படி கழக நிர்வாக உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. அதுபோது தோழர் சி. காசிலிங்கத்தைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பம்பாய் — தாராவி சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

3—10—55 மாலை 7 மணிக்கு, தோழர் எம். மாரியப்பா அவர்கள் தலைமையில், மன்ற உறுப்பினர்கள் கூட்டமும், பாண்டியனார் பிறந்த நாள் விழாவும் 'அன்பக'த்தில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் டி. வி. துரை, எம். பன்னீரையா ஆகியோர் பாண்டியனாரின் சேவை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—மூலகொத்தளம் அழகிரி மன்றம்

9—10—55-ல், சென்னை-மூலகொத்தளம் திரு. கே. இராமலிங்கம் எம். சி., அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 'அழகிரி மன்றம்' அமைக்கப்பட்டு, திரு. கே. இராமலிங்கம் அவர்களைத் தலைவராகவும், தோழர் வே. வ. வேந்தனைச் செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

மதுரை இளங்கோ மன்றம்

மதுரை பாண்டிய வேளாளர் தெருவில் உள்ள மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம், 2-10-55 மாலை 3 மணி அளவில், தோழர் மு. சந்தானம் தலைமையில் நடைபெற்றபோது, மன்ற வரவு-செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டும், முன்னாள் துணைச் செயலாளரின் பதவி விலகல் கடிதம் ஒப்புக்கொள்ளப்பட்டும், அதற்குப் பதிலாக தோழர் மு. விவேகானந்தன் அவர்களை துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் — மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பெயர் சூட்டல்

மேலூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் சண்முகம்—கமலம்மாள் ஆகியோரின் பெண் குழந்தைக்கு 2—10—55ல் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்களால் 'மணிமேகலை' என்று பெயரிடப்பட்டது, இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஆராய்ச்சிக்கென மாள்கின்றனர்?

1,25,000 'இராமத் தூதுவர்'கள் கதி என்ன?

டாக்கா—

கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த சுமார் 800 குரங்குகள் இங்கிருந்து நியூயார்க்குக்குச் செல்லும் வழியில் கல்கத்தாவுக்கு விமானத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலும் மருத்துவ ஆராய்ச்சிக்கென இரண்டாவது தடவையாக அனுப்பப்பட்டுள்ள இக்குரங்குகளின் மதிப்பு ரூ. 90,000; டாக்காவினின்றும் 3 மாதங்களுக்கு முன்பு முதல் தடவையாக 500 குரங்குகள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

'ரேசஸ்' என்ற இனத்தைச் சேர்ந்த இக்குரங்குகள், உலகிற்கு, வருடத்திற்கு 1,25,000 தேவைப்படுகிறதெனத் தெரிகிறது.

கன்னியாகுமரி—பம்பாய்

மேற்கு கரைச் சாலை அபிவிருத்தி

சென்னை, அக். 9

பம்பாயையும் — கன்னியாகுமரியையும் இணைக்கும் மேற்குக் கரையோரச் சாலையை அபிவிருத்தி செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சென்னை சம்மந்தப்பட்டமட்டில், சாலையின் 321 மைல் நீளத்திற்கு சமன் வேலை செய்யவும், 23 பெரிய பாலங்கள் கட்டவும் வகை செய்யப்பட்டிருக்கிறது; இதற்குச் செலவு ரூ. 282 கோடியாகும்.

இம்மாதிரியான பெரிய சாலைகள் அமைக்கும் செலவிற்கு மத்திய சர்க்கார் உதவி கணிசமான அளவு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்டைக்காலப் பெருமையை இழந்துவிட்ட நாடு!

'நிலைமை மாறுமா?'—அமைச்சரின் வேதனை

'மூலப் பொருள்'களை ஏற்றுமதி செய்துவிட்டு அதன்மூலம் உற்பத்தியான பொருளை இறக்குமதி செய்யும் விந்தை

புதுடில்லி—

டேராடூனில் நடைபெற்ற அத்தியாவசியத் தைலங்கள், வாசனைத் திரவியங்கள் பற்றிய விவாத அரங்கில் பேசிய மத்திய சர்க்கார் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் குறிப்பிட்டதாவது:—

"வாசனைத் திரவியங்கள், வாசனைத் தைலங்களின் உற்பத்தியும், உபயோகமும், பண்டைக் காலம் முதல் நம் நாட்டில் இருந்து வருகின்றன என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் இருக்கின்றன. அவைகளுள், சந்தனக் கட்டையும், சந்தனத் தைலமும் புகழ் பெற்றுள்ளன;

"சமீபத்தில் வாசனைத் திரவியங்கள் உற்பத்தியில் நம் நாட்டுக்கு இருந்த புகழ் போய்விட்டதென்றே தோன்றுகிறது; இதற்குக் காரணம், இவற்றின் உற்பத்தி சரிவர நடத்தப்படாததே ஆகும். பழைய உள்நாட்டு வாசனைப் பொருள்களை விரும்பியது மறைந்து, வெளிநாட்டு வாசனைத் திரவியங்கள்மீது நமக்கு மோகம் திரும்பியிருக்கிறது. நாம் இதுவரை வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்துவந்தவர்களாக இருந்ததற்கு மாறாக, வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கு மூலப்பொருள்களான அத்தியாவசியத் தைலங்கள், எண்ணெய்களையும், இவற்றைக் கொடுக்கும் பொருள்களையும் ஏற்றுமதி செய்துவிட்டு, தயாரிக்கப்பட்ட திரவியங்களை இறக்குமதி செய்பவர்களாக ஆகிவிட்டோம்; இந்த நிலைமை மாறவேண்டும்;

"அநேக செடி கொடிகள், மலர்கள், கிரைகள், இலைகள், புற்கள், வேர்கள் நமது காடுகளிலும், நிலப்புலன்களிலும் ஏராளமாகக் கிடைத்தாலும்கூட, வேறு சிலவற்றை இன்னும் சாகுபடி செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்தியாவசியமான எண்ணெய்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவைகளில், இந்தியா ஆண்டொன்றுக்கு ரூ. 20 கோடி பெறுமானமுள்ள கச்சாப் பொருட்களையும், ரூ. 180 கோடி பெறுமானமுள்ள வேலை தீர்ந்த பொருட்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது."

சிவப்பு நிறப் புழுக் கூட்டம்!

பயிர்களுக்குப் பெரும் சேதம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த சுமார் 12 கிராமங்களில் சிவப்பு நிறப் புழுக்களின் கூட்டம் பரவியுள்ளதாம். இதனால், இந்தக் கிராமங்களில் தற்போதுள்ள பயிர் பச்சைகளுக்குப் பெரிதும் சேதமேற்பட்டிருக்கிறதாம்.

உசிலம்பட்டியில் மட்டுமே, இரயில்வே பாதைக்கு இருமருங்கிலும் உள்ள வயல்களில் எல்லாம் இந்த சிவப்பு நிறப் புழுக்கள் குவிந்து கிடக்கின்றனவாம்; குளிர்ச்சியான சமயத்திலேயே இவைகள், ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு நகர்ந்து செல்கின்றனவாம்; இதனால், சில சமயங்களில் 2 மைல் நீளத்திற்கு இரயில்வே பாதையே தெரியாமல் இவை மூடிவிடுகின்றனவாம்.

இந்தக் கொள்ளைநோய் புழுக்களை ஒழிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

சென்னை 43-வது வட்ட தி. மு. க.

பொதுக்கூட்டம்

23-10-55 மாலை 6 மணிக்கு மீர்சாகிப்பேட்டையில் நடைபெறும்

★

தலைவர்:
தோழர் கே. கோவிந்தசாமீ
(சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர்)

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. முனுசாமி
(நகரசபை உறுப்பினர்)

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

எம். சிடி. எம். உயர்நிலைப் பள்ளியில் பேசுவார்.

சென்னை புரசவாக்கம் எம். சிடி. எம். உயர்நிலைப் பள்ளி தமிழ் சங்கத்தின் சார்பில் 12-10-55 புதன் மாலை 3-30 மணி அளவில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார். திரு. வி. எஸ். கோபால கிருஷ்ண அய்யர் தலைமை தாங்குவார்.

மாநிலக் குழு அறிக்கை எதிரொலி

பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம்

மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் வெளியானதை ஒட்டி, இந்தியாவெங்கும் பரவலாக ஆர்ப்பாட்டங்களும், கண்டன ஊர்வலங்களும், கடையடைப்புகளும் நடைபெற்று வருகின்றன.

பெல்காமில்……

பெல்காம் நகருடன் மாவட்டத்தின் பெரும் பகுதியைக் கர்நாடகத்துடன் சேர்க்குமாறு மாநிலச் சீரமைப்புக் குழு செய்துள்ள சிபாரிசினை எதிர்த்து மாணவர்கள் ஊர்வலம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

அது வன்னியில், நகரில் உள்ள பெரும்பாலான கடைகளும் மூடப்பட்டிருக்கின்றன.

இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்கும், இவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் மோதுதல் ஏற்பட்டு சண்டைநடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

போலீசார், தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து, ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியிருக்கின்றனர்.

மாவட்ட அதிகாரிகள், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்தக்கூடாதென தடை விதித்திருக்கின்றனர்.

மராட்டிய கன்னடத் தலைவர்கள் நகர் முழுதும் சென்று மக்களை அமைதியுடனிருக்குமாறு வேண்டிக் கொண்டிருக்கின்றனர்.

பம்பாய் நகரசபையில்……

சம்யுக்த மராட்டியம் வேண்டுமென்பது மராட்டியரின் கோரிக்கை; ஆனால், அந்தக் கோரிக்கையை மாநில புனரமைப்புக் குழுவினர் நிராகரித்துவிட்டனர்; இதனை ஆட்சேபித்து, பம்பாய் நகரசபையில் இரு உறுப்பினர்கள் ஒரு அவசரப் பிரரேபணை கொண்டுவந்திருக்கின்றனர்.

தலைவர் கண்டித்தும், காங்கிரஸ் உறுப்பினர்கள் இடைமறித்துக் கூறியும், அந்த இரு இடதுசாரிகளும் பேசிக்கொண்டே இருந்தனராம். அவர்கள் இருவரும் சர்க்காரையும், மாநில புனரமைப்புக் குழுவினரையும் தாக்கிப் பேசினராம்.

மேயருக்குப் பதிலாகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தயாபாய் பட்டேல் ஒரு உறுப்பினரை 15 நாட்களுக்கு சபையிலிருந்து விலக்கி வைத்துவிட்டு, கூட்டத்தை ஒத்திவைத்திருக்கிறார்.

மைசூரில்……

சிபாரிசு செய்யப்பட்டுள்ள கர்நாடக மாநிலத்தில் மைசூரை இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இங்கு சட்டசபைக் கட்டிடத்தின் முன்கூடி சுமார் 1,000 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

'மைசூர், மைசூராகவே இருக்க வேண்டும்' என்ற வாசகங்கள் பொறித்த அட்டைகளைத் தாங்கியிருந்தனராம்.

'இந்தச் சிக்கல்மீது மைசூர் மந்திரி சபை பதவியினின்றும் விலகவேண்டும்,' என்று அவர்கள் கோரினராம்.

பெல்லாரியில்………

பெல்லாரியை மீண்டும் ஆந்திராவுடன் சேர்க்க மாநிலக் குழு செய்துள்ள சிபாரிசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இங்குள்ள கல்லூரி உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள், வகுப்புகளுக்குச் செல்லாமல் புறக்கணித்திருக்கின்றனர்.

'பெல்லாரி கர்நாடகமே,' 'துங்கபத்திரா திட்டம் கர்நாடகத்திற்கே சொந்தம்,' 'மாநிலக் குழு அறிக்கை ஒழிக' என்று குரல் எழுப்பியவண்ணம் அந்த மாணவர்கள் பின்னர் ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர்.

ஒரிசாவில்………

பெர்ஹாம்பூர் கள்ளிக்கோட்டா கல்லூரி மாணவர்கள், சிராய்கெல்லா கர்ஸ்வான் மீதுள்ள ஒரிசாவின் கோரிக்கைகளை குழுவினர் நிராகரித்ததை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

புதிய மேற்கு பாகிஸ்தான் 'மாநிலம்'

இடைக்கால மந்திரி சபை அமைகிறது

புதிய மேற்கு பாகிஸ்தான் மாநிலத்திற்கு 7 பேர் கொண்ட ஒரு இடைக்கால மந்திரி சபை தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்கு பாகிஸ்தானில் மாநிலங்களை ஒழித்து, எல்லா மாநிலங்களையும் ஒரே உறுப்பாக அமைக்கும் திட்டம், புதிய அரசியல் நிர்ணய சபையில் பலத்த எதிர்ப்புக் கிடையே ஏற்றுக்கொள்ளப்பட்டபின், அதன்படி இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று தெரிய வருகிறது.

தற்சமயம், பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் தபால்-தந்தி இலாகா மந்திரியாயிருக்கும் டாக்டர் கான் சாகிப், அந்த புதிய மேற்கு பாகிஸ்தான் மாநிலத்திற்கு, முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்; இவர், எல்லைக் காந்தி கபார் கானின் சகோதரராவார்.

(1) சர்தார் அமீது கான் தஸ்திரி (மேற்கு பஞ்சாப் முதன் மந்திரி), (2) சையத அமீது உசேன் (பாக். காஷ்மீர் விவகார இலாகா மந்திரி), (3) கான் குர்பான் அலிகான் (வடமேற்கு எல்லை மாநில கவர்னர்), (4) சர்தார் பகதூர் கான் (வ. மே. எ மா முதன் மந்திரி), (5) எம் ஏ. குர்ரோ (சிந்து முதன் மந்திரி), (6) மியான் மும்தாஜ் தௌலத்தானா (மேற்கு பஞ்சாப் முன்னாள் முதன் மந்திரி) ஆகியோர் இதர மந்திரிகளாக நியமனம் பெற்றிருக்கின்றனராம்.

இந்தப் புதிய மந்திரி சபை வெள்ளியன்று பதவி ஏற்கும்; தேர்தல் நடைபெறும்வரை இது ஒரு இடைக்கால மந்திரி சபையாகவே இருக்கும்; வரும் நவம்பர் இறுதியில் தேர்தல் நடைபெறலாம் என்று தெரிய வருகிறது.

மேற்கு பாகிஸ்தான் உயர்நீதி மன்றம் ஒன்றையும் நிறுவியிருப்பதாகக் கவர்னர்-ஜெனரல் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறாராம்.

நிலமற்ற தொழிலாளர் வாழ்க்கை நிலைமை

பரிசீலனை செய்யுமாறு மத்திய ஆட்சியினர் உத்தரவு

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பயன்களை அறிவதற்காகவும், இதர அபிவிருத்தித் திட்டங்களின் விளைவுகளை அறிவதற்காகவும் நாட்டிலுள்ள நிலமற்ற தொழிலாளர்களின் நிலைமையைப் பரிசீலனை செய்யுமாறு இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

நாட்டின் மக்கள் தொகையில் நிலமற்ற தொழிலாளர்கள் 22 சதவிகிதம் உள்ளனர்; வருடத்தில் சராசரியாக 160 நாட்களுக்கு மட்டும் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. அவர்களது சராசரி வருமானம் ரூ 104;

ஆனால், நாட்டின் தேசிய வருமானம் ரூ. 267. நிலச் சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதன் மூலம் நிலமற்ற தொழிலாளர் தொகை 27 சதவிகிதமாக உயரக்கூடும்.

பம்பாயில் துணிகரக் கொள்ளை

இரயில் நிலைய உதவி அதிகாரி சுட்டுக் கொலை

பம்பாய், அக். 9—

துணிகரமான கொள்ளைச் சம்பவம் ஒன்று, பம்பாய்-தாதர் இரயில் நிலையத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இரு கொள்ளைக்காரர்கள் இரயில் நிலைய உதவி அதிகாரியை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்திவிட்டு, அவரிடமிருந்த பணப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனராம்.

இன்று அதிகாலை $1\frac{1}{2}$ மணிக்கு, அன்று வசூலான தொகையை மூன்று பைகளில் போட்டு கஜானாவிற்குள் செலுத்துவதற்காக உதவி அதிகாரி எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

ஒரு இரயில்வே போலீசார் உட்பட இருவரின் துணையுடன் அந்த உதவி அதிகாரி மேல் பாலம் வழியாக, அடுத்த 'பிளாட்பாரத்'திற்குச் சென்றுகொண்டிருந்தபோது இரு கொள்ளைக்காரர்கள் துப்பாக்கியுடன் வந்து வழிமறித்து, மிரட்டி, பணப் பையைக் கேட்டிருக்கின்றனர்; உதவி அதிகாரி மறுத்துவிடவே, கொள்ளையன் ஒருவன் அவரைச் சுட்டு வீழ்த்திவிட்டு, ஒரு பணப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான்; மற்றவனும் அவனைப் பின்தொடர்ந்து தப்பிவிட்டான்.

உதவி அதிகாரியுடன் கூடச் சென்ற இருவரும் என்ன செய்வதென்றே அறியாது திகைத்து நின்றுவிட்டனர்.

கொள்ளையர் தூக்கிச் சென்ற பையில் ரூ. 560 மட்டுமே இருந்தது எனவும், விட்டுச்சென்ற பையில் ரூ. 10,000 இருந்தது என்றும் கூறப்படுகிறது.

போலீசார், தீவிரமாகக் கொள்ளையரைத் தேடுவதில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

அறிவிப்பு

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்காக நிதி அனுப்பிவைக்கும் தோழர்கள் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பெயருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இனி நிதி அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், இராயபுரம், சென்னை—13,' என்ற முகவரிக்கே நிதியினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

'அறிவகம்' சென்னை-13 6—10—55 — பொறுப்பாளர் தி. மு. கழக தலைமைநிலையம்

திருக்குறள் வகுப்பு

12—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

• • •

12—10—55 இரவு 8 மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெருவிலுள்ள வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் இ. தியாகராசன் அவர்கள் குறள் வகுப்பு நடத்துவார்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

12—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்டம் தி மு. கழகப் பணிமனையில், தோழர் சொர்நாதன் தலைமையில் நடைபெறும். 'சொல் வன்மை' எனும் பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

• • •

13-10-55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.